OL/2021(2022)/16-T-I, II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**16 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Ord. Level) Examination, 2021(2022)

| | | | |
|---|---|---|---|
| ඉස්ලාම් | I, II | | පැය තුනයි |
| இஸ்லாம் | I, II | | மூன்று மணித்தியாலம் |
| Islam | I, II | | *Three hours* |

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## இஸ்லாம் I

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
※ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
※ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** 'ஹிதாயத்' என்பதன் கருத்து
(1) இஸ்லாமிய வழி (2) நேர் வழி
(3) மறுமைக்கான வழி (4) நபி (ஸல்) அவர்களின் வழி

**2.** 'அல் - மாஉத் தஹூர்' என்னும் பிரிவில் அடங்கும் நீர்
(1) தேநீர் (2) பழச்சாறு (3) இளநீர் (4) கடல் நீர்

**3.** மனிதர்கள் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டபோதும், அல்லாஹ்வால் மிகவும் வெறுக்கப்பட்ட ஒரு செயல்
(1) தலாக் (2) பலதார திருமணம்
(3) பிரயாணம் (4) தொழுகைகளை சேர்த்துத் தொழல்

**4.** மறுமையில் முதலில் விசாரிக்கப்படும் ஓர் 'இபாதத்'
(1) தொழுகை (2) நோன்பு (3) ஸக்காத் (4) ஹஜ்

**5.** நபி முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அல் - குர்ஆன் அருளப்பட்டு பூரணப்படுத்தப்படுவதற்கு எடுத்துக் கொண்ட வருடங்கள்
(1) 10 ஆகும். (2) 11 ஆகும். (3) 21 ஆகும். (4) 23 ஆகும்.

**6.** இஜ்மாஉ, கியாஸ் தவிர்ந்த ஏழு துணை மூலாதாரங்களுள் **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?
(1) இஸ்லத் (2) இஸ்திஹ்ஸான் (3) உர்ப் (4) கவ்லுஸ் ஸஹாபா

**7.** இமாம் ஸமஹ்ஷரீ அவர்கள் இலக்கியக் கண்ணோட்டத்தில் எழுதிய அல் - குர்ஆன் தப்ஸீர் நூலின் பெயர்
(1) ஜலாலைன் ஆகும். (2) கஷ்ஷாப் ஆகும்.
(3) பீ ழிலாலில் குர்ஆன் ஆகும். (4) தைழாவி ஆகும்.

**8.** தூய்மை, வளர்ச்சி என்ற கருத்துக்களைத் தரும் இஸ்லாமிய ஐங்கடமைகளில் ஒன்று
(1) ஸவ்ம் (2) ஸக்காத் (3) ஸலாத் (4) ஹஜ்

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka,
Department of Examinations Sri Lanka

22. "இஸ்லாமியச் சட்டவியல் - ஒரு சர்வதேசப் பார்வை" என்னும் நூலின் ஆசிரியர்
(1) கலாநிதி சீ. வி. வீரமந்திரி (2) சிறிமா கிரிபாமுன
(3) குமாரி ஜயவர்தன (4) பேராசிரியர் பத்மநாதன்

23. 'இமாரத்' என்ற அறபுச் சொல் குறிப்பது
(1) அரசாட்சியை ஆகும். (2) தலைமைத்துவத்தை ஆகும்.
(3) நான்கு கலீபாக்களின் ஆட்சியை ஆகும். (4) பூமியை வளப்படுத்தும் செயற்பாட்டை ஆகும்.

24. "மனிதன் வயிற்றைத் தவிர கெட்ட பாத்திரம் ஒன்றை நிரப்புவதில்லை. சாப்பிட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் மூன்றில் ஒரு பகுதி உணவுக்கும், மூன்றில் ஒரு பகுதி நீருக்கும், மூன்றிலொரு பகுதி ...?" என்ற நபி(ஸல்) அவர்களின் ஹதீஸில் குறிப்பிடப்படும் இறுதி மூன்றிலொரு பகுதி
(1) வெறுமனே விடுவதற்கு ஆகும். (2) மூச்சுக்கு ஆகும்.
(3) காற்றுக்கு ஆகும். (4) உடம்புக்கு ஆகும்.

25. தனது பிரச்சினையை முறையிட வந்த ஒரு பெண்மணியை விசாரிக்க தனக்கு சந்தர்ப்பம் கிடைக்காததால் மீண்டுமொருமுறை அவளை வருமாறு கூறி, தான் இல்லாதபோது இன்ன நபித்தோழரிடம் பிரச்சினையை முறையிடுமாறு நபியவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அந்த நபித்தோழர்
(1) அபூபக்கர் (ரழி) ஆவார். (2) அலி (ரழி) ஆவார்.
(3) உமர் (ரழி) ஆவார். (4) உஸ்மான் (ரழி) ஆவார்.

26. மறுமையில் 'ஸகர்' எனப்படும் நரகில் நுழைபவர்
(1) நோன்பு நோற்காதவர் (2) ஸகாத் கொடுக்காதவர்
(3) தொழாதவர் (4) ஈமான் கொள்ளாதவர்

27. மஸ்ஜிதுந் நபவி நிர்மாணிக்கப்பட்டது
(1) ஹிஜ்ரத்துக்கு முன்னராகும். (2) ஹிஜ்ரத்துக்குப் பின்னராகும்.
(3) நபி(ஸல்) அவர்கள் மக்காவில் இருந்தபோதாகும். (4) மக்காவுக்குத் திரும்பிச் சென்ற போதாகும்.

28. பின்வருவனவற்றுள் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களால் எழுதப்பட்ட நூல்
(1) கிதாபுல் உம்மு (2) பிக்ஹுல் அக்பர்
(3) முஅத்தா (4) முஸ்னத் அஹ்மத்

29. 'வஹி கைரு மத்லுவ்' என அழைக்கப்படுவது
(1) அல் - குர்ஆன் வசனங்களாகும்.
(2) நபி முஹம்மது (ஸல்) அவர்களது ஸுன்னாவாகும்.
(3) குர்ஆன், ஸுன்னா இரண்டுமாகும்.
(4) நபிமார்களுக்கு அருளப்பட்ட வஹியாகும்.

30. நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றபோது முதலில் தரித்திருந்த வீட்டினுடைய உரிமையாளரான நபித் தோழர்
(1) முஸ்அப் பின் உமைர் (ரழி) (2) அபூ ஐயூப் (ரழி)
(3) முஆத் இப்னு ஜபல் (ரழி) (4) அபூ தர் அல் - கிபாரி (ரழி)

31. ஒருவனிடம் 201 ஆடுகள் சொந்தமாக இருந்தால் அவன் கொடுக்க வேண்டிய ஸகாத்தின் அளவு
(1) 03 பெண் ஆடுகள் (2) 03 ஆண் ஆடுகள்
(3) 02 பெண் ஆடுகள் (4) 04 ஆண் ஆடுகள்

32. 'பிக்ஹுல் அவ்லவிய்யாத்' என்னும் அடிப்படையில் பின்வரும் செயற்பாடுகளில் நீர் எதற்கு முன்னுரிமை வழங்குவீர்?
(1) கற்ற பாடங்களை மீட்டுதல்
(2) வீட்டுப் பணிகளில் தாயாருக்கு உதவுதல்
(3) அல் - குர்ஆனை ஓதுதல்
(4) விபத்தில் சிக்கியவர்களை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லல்

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

**38.** பின்வருவனவற்றுள் தயம்மும் பற்றிய **பிழையான** கூற்று எது?

(1) வுழுவின் உறுப்புக்களில் பெண்டேஜ் அணிந்த ஒருவர் தொழுகைக்காக தயம்மும் செய்து கொள்வார்.
(2) கட்டுப் போடப்பட்ட உறுப்புக்களைக் கழுவுவதைத் தவிர்த்துக் கொள்வார்.
(3) கட்டுப் போடப்படாத, வுழுவின் ஏனைய உறுப்புக்களை நீரினால் கழுவிக் கொள்வார்.
(4) வுழுவுடைய உறுப்புக்கள் தவிர்ந்த ஏனைய கட்டுப்போடப்பட்ட உறுப்புக்களில் தயம்மும் செய்து கொள்வார்.

**39.** பின்வரும் பதங்களைக் கருதுக.

| | | |
|---|---|---|
| A - ஜாஹிலிய்யா | D - முஸ்ஹப் உஸ்மான் | G - பைஅதுல் அகபா |
| B - குத்தாபுல் வஹி | E - அஸபிய்யா | H - தாபிஈ |
| C - கபீலா | F - ஸீறா | I - ஷெய்கு |

மேற்படி அட்டவணையில் இஸ்லாத்துக்கு முற்பட்ட கால அரேபிய சமூகத்துடன் தொடர்புபட்ட பதங்களை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி யாது?

(1) A B C D (2) A C E I (3) B G I H (4) B D F G

**40.** பின்வருவனவற்றில் ஒரு முஸ்லிமின் உணவுப் பழக்கம் பற்றிய கூற்றுக்களில் **பிழையானது** எது?

(1) ஒரு முஸ்லிம் தனது உடலாரோக்கியத்தைக் காத்துக்கொள்ளும் வகையில் உணவுப் பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளல் அவசியமாகும்.
(2) அளவு கடந்து உண்பதையும், உடலுக்கு ஒவ்வாதவற்றை உட்கொள்வதையும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.
(3) அனுமதிக்கப்பட்டுள்ள உற்சாக மென்பானங்களை அதிகமாக உட்கொள்வது உடலாரோக்கியத்தைப் பாதிப்பதில்லை.
(4) அதிகமாக உணவு உண்டு, கொழுத்த உடலுடன் காணப்படும் ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் வெறுப்பை சம்பாதித்துக் கொள்கின்றான்.

* *

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

**5.** (i) குறைஷிக் காபிர்களை எதிர்த்து கவிதை பாடும்படி நபி (ஸல்) அவர்கள் ஊக்குவித்த ஸஹாபிகள் **இருவரின்** பெயர்களைத் தருக.

(ii) நபி (ஸல்) அவர்களால் ஆரம்ப காலங்களில் பயன்படுத்தப்பட்ட ஊடக வழிமுறைகளில் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) இஸ்லாம் கூறும் தொடர்பூடகங்களின் பண்புகள் **ஐந்தைச்** சுருக்கமாக விபரிக்குக.

**6.** (i) நபி (ஸல்) அவர்களின் தூதை சுமந்துகொண்டு இலங்கை வந்த வஹப் இப்னு அபீ ஹப்ஸா (ரழி) பற்றிக் குறிப்பிடும் **இரண்டு** ஆய்வாளர்களைத் தருக.

(ii) இலங்கைக் கரையோரங்களில் குடியேறிய பனூ ஹாஷிம்கள் பற்றி சேர் ஜேம்ஸ் டெனண்ட் குறிப்பிடும் தகவலொன்றை விளக்கமாக எழுதுக.

(iii) இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் ஆரம்பகால முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்புகளில் **ஐந்து** விடயங்களைச் சுருக்கமாக விளக்குக.

**7.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) அல்-குர்ஆன் ஓர் அற்புதம்

(ii) ரீ.பீ. ஜாயா

(iii) இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள்

(iv) வட்டியும் அதன் விபரீதங்களும்

* * *

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,